நாள் 25-08-2023

STC No. 217 / 2021

ம.சா. 1. திரு.பொன்னுத்துரை (வயது 44 /2023)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. காசிமேஜர்புரம் உங்கள் சொந்த ஊர் இல்லை என்றால் சரிதான். அது எனது மனைவியின் சொந்த ஊர் ஆகும். நான் 1992 ஆம் ஆண்டு முதல் இங்கு குடும்பத்தோடு குடிவந்துவிட்டேன். நீங்கள் 1992 ஆம் ஆண்டு குடிவந்திருந்தாலும் நீங்கள் படித்ததெல்லாம் வெளியூரில் தான் படித்தீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் உங்கள் நிரூபண உறுதி கூற்றில் எந்த இடங்களை விற்பனை செய்து வங்கியில் வைப்பீடு செய்திருந்தீர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் ஆமாம். நீங்கள் கனரா வங்கியில் இருந்து ரூ.6,00,000/- எடுத்ததாக கூறியுள்ளீர்கள். அவ்வாறு பணம் எடுத்ததற்கான விவரம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆனால், தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரிக்கு நீங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பாலையா பாண்டியன் என்றுதான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம். நாங்கள் அவரை அப்படித்தான் கூப்பிடுவோம்.

2. எதிரி கொடுத்த காசோலையில் பாலசுப்பிரமணியன் என்று தான் கையெழுத்து இடப்பட்டுள்ளது என்றும், அப்போதே உங்களுக்கு அவர் பாலசுப்பிரமணியனா அல்லது பாலையா பாண்டியன் என தெரியாமலேயே நீங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளீர்கள் என்றால் அவரை நாங்கள் பாலையா பாண்டியன் என்று தான் கூப்பிடுவோம். அவர் பாலசுப்பிரமணியன் என்று நீதிமன்றம் வந்த பின்னர் தான் தெரியும். எதிரி உங்களிடம் கடன் வாங்க வேண்டும் என்று அவசியம் இல்லை என்றும், நீங்கள் குற்றாலம் பகுதியில் தினசரி சிட்டை வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்கிறீர்கள் என்றால் இல்லை. எதிரி குற்றாலம் பிரதான அருவி அருகில் ஜெராக்ஸ் கடை மற்றும் டீ சர்ட் மற்றும் துணிகள் விற்கும் கடை வைத்திருந்தார் என்றால் ஜெராக்ஸ் கடை கிடையாது. சோனா காட்டன் என்ற பெயரில் துணி கடை தான்

வைத்திருந்தார்.

3. நீங்கள் சிட்டை வட்டி நடத்தி வந்ததில் எதிரி பணம் வாங்கி இருந்தார் என்றும், அதில் எதிரி உங்களுக்கு ரூபாய் 3,00,000/-ம் தான் தர வேண்டும் என்றும், மேற்படி எதிரியின் கடைக்கு நீங்கள் தினசரி சிட்டை வட்டி கலெக்க்ஷனுக்கு வரும் நபர் என்பதால், மேற்படி கடையில் எதிரி வைத்திருந்த காசோலையை நீங்கள் எடுத்து வந்து அதில் உள்ள பாலசுப்பிரமணியன் என்ற பெயர் கூட உங்களுக்கு தெரியாமல் பாலையா என வங்கியில் செலுத்தி தவறுதலான பெயரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களிடம் எதிரி வாங்கி இருந்த ரூபாய் மூன்று லட்சம் பணத்தையும் தினசரி திருப்பி செலுத்தும் முறையில் எதிரி உங்களிடம் சிட்டை வட்டிக்கு வாங்கிய பணத்தையும் செலுத்தி விட்டார் என்றால் என்னிடம் மொத்தமாகத்தான் வாங்கினார். சிட்டை வட்டிக்கு நான் கொடுக்கவில்லை. 12.09.2020 தேதியில் நீங்கள் எதிரி உங்களிடம் பணம் வாங்கியதாக கூறியுள்ள நாள் குற்றாலம் பகுதியில் கொரோனா கால கட்ட ஊரடங்கு போடப்பட்ட நாள் என்றால் இல்லை. மேற்படி காலகட்டத்தில் கொரோனா கால ஊரடங்கு அனைத்து சுற்றுலா தளங்களிலும் போடப்பட்டிருந்தது என்றும், அதேபோல் குற்றாலம் பகுதியிலும் ஊரடங்கு இருந்தது என்றால் ஆமாம். என்னிடம் வீட்டில் தான் வந்து பணம் வாங்கினார்.

4. நீங்கள் சொத்துக்களை விற்பனை செய்து வங்கியில் வைப்பீடு வைத்திருந்ததாக கூறியுள்ளீர்கள். அது எத்தனை ஆண்டுகள் வைப்பீடு வைக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் நான் வைப்பீடாக வைக்கவில்லை. என்னுடைய சேமிப்பு வங்கி கணக்கில் தான் வைத்திருந்தேன். மேற்படி சேமிப்பு வங்கி கணக்கில் தான் நீங்கள் வைத்திருந்ததாக உங்களது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிரூபண உறுதி கூற்றில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நீங்கள் பாலையா பாண்டியன் என்ற பெயரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதால் தான் அது எதிரிக்கு சார்பு ஆகவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணையை வாங்கியுள்ளார். எதிரி நீதிமன்றத்தில் இருந்து வந்த தபால் என்றுதான் அதைப் பெற்றுள்ளார் என்றும், நீங்கள் அனுப்பிய அறிவிப்பு அவருக்கு அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள், நேரத்தில் எதிரி உங்கள் வீட்டிற்கு வந்து உங்களிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், நீங்களாகத்தான் எதிரியின் கடைக்கு சென்று தினசரி சிட்டை வட்டிக்காக உங்கள் தொழில் வரவு செலவில் எதிரிக்கு பணம் கொடுத்து அதையும் எதிரி உங்களுக்கு திருப்பி செலுத்திய பின்னர் கூடுதல் வட்டி நீங்கள் அவரிடம் கேட்டு அவரது கடையில் இருந்த காசோலை அவருக்கு தெரியாமல் நீங்கள் எடுத்து தவறுதலாக வங்கியில் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எனவே நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையொப்பம் செய்யப்பட்டது

M SUNIL RAJA

Digitally signed by M SUNIL RAJA
Date: 2023.08.25 17:40:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் நீதிமன்றம் செங்கோட்டை